**நெல் சந்தைப்படுத்தல் சபை – 2017**

---

நெல் சந்தைப்படுத்தல் சபையின் 2017 செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க நெல் சந்தைப்படுத்தல் சபை அதிகாரச்சட்டத்தின் 30 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(6) பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டின் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**2.2 நிதிக்கூற்றுக்கள்**

---

**2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

---

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் இருப்பு**

---

சபையினால் இறுதியாக தயாரிக்கப்பட்டிருந்த 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **சொத்துக்கள்** | **பெறுமதி** |
|---|---|
| | **ரூபா** |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | 1,253,094,741 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 12,155,177,280 |
| மொத்தச் சொத்துக்கள் | |
| | 13,408,272,021 |
| பொறுப்புக்கள் | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 10,196,560,953 |
| நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | 15,272,288,892 |
| | 25,468,849,845 |
| தேறிய சொத்துக்கள் / உரிமை | (12,060,577,824) |
| மொத்த பொறுப்புக்கள் | |
| | 13,408,272,021 |
| மொத்த வருமானம் | 9,283,377,234 |
| மொத்தச் செலவினம் | 15,183,703,089 |
| பற்றாக்குறை | |
| | 5,894,325,856 |

## 2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

சபையின் பதிவேடுகளின் பிரகாரம் இலங்கை வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 8,585.9 மில்லியனாக இருந்த போதிலும் இலங்கை வங்கியின் மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் அம்மீதி ரூபா 8,589.02 ஆக இருந்தமையால் ரூபா 3.12 மிலலிய்ன வேறுபாடு காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2016 ஜனவரி 28 ஆந் திகதிய எம்ஆர்ஈஏ/சீஎம்/2016/9 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக 2016 பெப்ரவரி 24 ஆந் திகதிய அமப/16/0185/732/006 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் பொருளாதா அபிவிருத்தி அமைச்சினால் 2014 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட 2000 மற்றும் 10,000 மெற்றிக் தொன் இயலளவுடன் கூடிய 2 களஞ்சியங்கள் சபைக்கு 2016 ஆம் ஆண்டின் போது கையேற்கப்பட்டிருந்தன. இக்களஞ்சிய நிர்மாணத்திற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அரச பொறியியளாளர் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 34,451,514 தொகையை கிராமிய பொருளாதார அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் 2017 ஆகஸ்ட் 17 மற்றும் 2017 ஒக்தோபர் 16 ஆந் திகதி சபையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இக் களஞ்சியம் அமைந்துள்ள காணி, வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தாக காணப்பட்டதுடன் 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையிலும் சபைக்கு கையேற்கப்படாதிருந்ததுடன் களஞ்சியம் கையேற்கப்பட்ட திகதி முதல் கணக்காய்வு திகதி வரையான 2017 திசெம்பர் 26 ஆந் திகதி வரை 25.5 மெற்றிக் தொன் பழுதடைந்த நெல் இருப்பொன்றும் 7.8.1 மெற்றிக் தொன்களான நெல் இருப்பொன்று மாத்திரமாக இருந்தமையால் களஞ்சியம் குறைபயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் அரசின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தும் போது ஏற்பட்ட நட்டத்தை தீர்க்கும் வகையில் கிராமிய பொருளாதார அமைச்சினால் 2016 நவம்பர் 25 ஆந் திகதி சமர்ப்பித்திருந்த அமைச்சரவை பத்திரத்திற்காக 2016 திசெம்பர் 21 ஆந் திகதிய அமப/16/254/732/237 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் சபையின் கணக்குகள் நாளது வரையாக்கப்பட்டு வெளிவாரி சுயாதீன கணக்காய்வாளர் ஒருவர் மூலம் நிதிக் கணக்காய்வினையும் இருப்பு மெய்மையாய்வினையும் மேற்கொள்ள வேண்டுமென முன்மொழியப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சபையினால் 2017 யூன் 12 ஆந் திகதி முதல் ஒவ்வொரு வலயத்திற்குரிய நெல் இருப்பு மெய்மையாய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 யூன் 30 ஆந் திகதி வரை அம்பாறை, பொலன்னறுவை மற்றும் கிழக்கு வலயங்களில் உரிய இருப்பு மெய்மையாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் 2010 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கைகள் பாராளமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவை சமர்ப்பிக்கப்பட்டிருந்த பீஈ/111/-/2013 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் தொடர்பாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரால் சமர்பிக்கப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் முறையான நெல் இருப்புக் கட்டுப்பாட்டு முறையொன்றை பேணிச் செல்லாமை காரணமாக சபையின் நிதிக்கிரயம் அதிகரிப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சபையினால் 2013 ஆம் ஆண்டின் இருப்பு தகவல் முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்காக அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதற்காக 2013 ஆம் ஆண்டு முதல் 2016 யூன் 30 ஆந் திகதி வரை சபையினால் ரூபா 13,035,405 செலவிட்டிருந்த போதிலும் 2018 யூலை 31 ஆந் திகதி வரை அந் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.2 தொழிற்பாட்டு செயற்பாடுகள்

2016 ஒக்தோபர் 26 ஆந் திகதிய அமப/16/2068/723/053 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் சபைக்கு சொந்தமான நெல் இருப்பினை நியாயமான விலையொன்றின் கீழ் கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்திற்கு வழங்கப்பட்டு அந்நெல் அரிசியாக மாற்றப்பட்டு லங்கா சதோசா, கூட்டுறவு மற்றும் மொத்த வியாபாரிகள் ஊடாக-நுகர்வோருக்கு வழங்குவதற்கும் அரிசி விற்பனையின் பின்னர் கிடைக்கும் பணத்தில் சபையின் விலை விபரங்களை தீர்வு செய்வதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை சபையினால் கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்திற்கு 95,935,082 கிலோகிராம் நெல் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த 39,179,868 கிலோ கிராம் நெல் தொடர்பாக சபை மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு இடையே எழுத்து மூல உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சபையினால் வழங்கப்பட்டிருந்த நெல்லுக்காக கூட்டுத்தாபனத்திடமிருந்து ரூபா 1,972,629,100 தொகை மாத்திரம் கிடைத்தமையால் 2017 நவம்பர் 16 ஆந் திகதியில் உள்ளவாறு மற்றும் அறவிட வேண்டியதாக காணப்பட்ட மீதி ரூபா 2,343,579,014 ஆக இருந்தது.

## 3.3 இணங்காணப்பட்ட சட்டங்கள்

(அ) மீளாய்வாண்டின் போது சபை மேற்கொண்ட இருப்பு மெய்மையாய்வின் போது இருப்பு பதிவேடு மற்றும் பௌதீக மெய்மையாய்வு இருப்பு மீதியின் பிரகாரம் 13,379,128 கிலோ கிராம் நெல் பற்றாக்குறையொன்று காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) நெல் இருப்பு முறையாக இராக்கையில் அடுக்கி வைக்கப்படாமை களஞ்சியங்கள் ஈரலிப்பிற்கு உட்படல், மழை நீர் களஞ்சியங்களுக்குள் சிந்துதல், கிருமிகள் பிராணிகளால் ஏற்படும் தேசங்கள் மற்றும் நெல் இருப்பினை விநியோகிக்கப்படாமையால் 192,453 கிலோ கிராம் நெல் இருப்பு சேதமடைந்திருந்ததாக நெல் மெய்மையர்யவின் போது அவதானிக்கப்பட்டது.

## 4. நிலைபேறான அபிவிருத்தி

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகள் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அனைத்து அரசாங்க நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக நெல் சந்தைப்படுத்தும் சபையினால் தமது நோக்கெல்லைக்கு கீழ் கொண்டு வரப்பட்டுள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக எவ்வாறு அமுல்படுத்தப்படவேண்டுமென என்பது தொடர்பாக தெளிவுப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பெறுகைகள்

சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நில இராக்கைகள் கொள்வனவு செய்யும் பெறுகைக்குரிய இரண்டு சந்தர்ப்பங்களில் பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்ததுடன் நில இராக்கையொன்றில் இருக்க வேண்டிய விதந்துரைகளின் நில இராக்கைகளில் காணப்பட்ட வழங்கனரால் சமர்பிக்கப்பட்டுள்ள கூறு வழலைகள் குறைபாடுகள் காணப்பட்டமையால் முதலாவது ---- கம்பனிகளால் வழங்கியிருந்த கூறுவிலை நிராகரிக்கப்பட்டிருந்தன.

அதன் பிரகாரம் மீண்டும் அறிவித்தலினை வெளியிடுவதற்காக ரூபா 45,080 ஆன மேலதிக கிரயமொனறை மேற்கொள்ள சேர்ந்திருந்தது. மேலும், புதிய கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் வழங்குனருக்கு 5 வருட அனபவம் இருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 51,300,000 செலவு செய்து 10,000 இராக்கைகள் 5 வருட அனுபவத்தை வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் கிடைத்திருந்த 9130 இராக்கைகளில் 5265 நிர்மாணிக்கப்பட்ட நியமத்தில் காணப்படவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வவ்போது தலைவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) களஞ்சிய நிர்வாகம் | (i) சரியான தரத்தில் நெல் களஞ்சியப்படுத்தாமை<br>(ii) களஞ்சிய அறிக்கைகள் / பதிவேடுகள் முறையாகப் பேணப்படாமை<br>(iii) கணனி மயப்படுத்தப்பட்ட இருப்பு மட்டமொன்று பேணப்படாமை |
| (ஆ) வங்கிக் கணக்கிணக்கம் தயாரிக்காமை | (i) வங்கிக் கணக்கிணக்கம் தயாரிப்பதி தாமதம்<br>(ii) இனங்காணப்படாத மீதிகளை தீர்த்தல் |